**OPEN ACCESS**

Manuscript ID: TAM-070220225825

Volume: 7

Issue: 2

Month: October

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 02.07.2022

Accepted: 28.08.2022

Published: 01.10.2022

Citation:
Kalavathi, V. "In Sangam Sandal Tree." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 2, 2022, pp. 49–56.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i2.5825

*Corresponding Author:
skalavathiv@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Sandalwood in Sangam Literature

**Dr. V. Kalavathi**
*Head Assistant Professor, Department of Tamil*
*Rajapalayam Raju's College, Rajapalayam, Tamil Nadu India*
*http://orcid.org/0000-0003-2062-3072*

**Abstract**
It is a Well know fact that the inner of an ancient Tamil literature was written with ink. Nature, psychology, warfare, and spiritullity can be traced back to the genres of the genre, but the singularity of the use of inanimate objects in literature is admirable. The purpose of this study is to determine the basis of human survival. The purpose if this study is to examine the basis of people's livelihood. Sangam literature is capable of intergrating the intrinsic quests of life. People are natural, the study also focuses on the fact that has transformed people into adaptable people by adapting to a wide range of ethics in an adaptive environment. More on it is an opportunity to learn about facial expressions. This study also focuses on the fact that it has transformed. It is also an opportunity to learn about the morals of the greats of ancient Tamil compare the natural culture of the sandalwood.

**Key Words:** Sandalwood, Mortar, Nutritive, Aram, Fertility

**References**

1. Objectives Venpamalai, Ayyanaridanar Kazhagam Publication, p -781.
2. Na. Kathirai Thanpillai. 2003. *Tamil Language Dictionary*, Chennai, Saratha Publishing House Red Edition, First Edition.
3. Abidhana Chintamani, 2004. Red Edition Chennai First Edition, Sarada Publishing House, p-991.
4. 1994. *Tolkappiyam Subject Authority*. Madurai, Madurai Kamarasar University First Edition
5. Supra Bharti Manian. 2017. *Vanishing Trees*, Chennai, New Century Book House
6. 2003. Naritai Song No-1. Chennai, New Century Book House
7. 2003. Naritani Song No -51. New Century Book House
8. 2003. Naritai Song No -64. Chennai, New Century Book House.
9. 2003. Naritaini Song No -140. Chennai, New Century Book House.
10. 2003. Agananoor Song No-242. Chennai, New Century Book House.
11. 2003. Agham Song No-288. Chennai, New Century Book House.
12. 2003. Agam Song No. 388. Chennai, New Century Book House.
13. 2003. Study Song No. 9. Chennai, New Century Book House.
14. Sivasubramanian, B. 2019. *Tamil's Vegetation*, Bio Publishing, First Edition
15. 2003. Puram Song No- 374, Chennai, New Century Book House
16. 2009. Trees of Life p- 84, Chennai, RS Narayanan Pawai Printers Rayapetta First Edition.
17. 2003. *Paribadal lines 27 -44*. Chennai, New Century Book House.
18. 2003. *Vaiyai Paribadal 12.* Chennai, New Century Book House.
19. 2003. *Tirumuru Air Force 32 - 36.* Chennai, New Century Book House.
20. Porunaratup 235 -2040, Chennai, New Century Book House

# சங்க இலக்கியப் படைப்புகளில் சந்தன மரம்

*கலாவதி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்
இராஜபாளையம் இராஜூக்கள் கல்லூரி
இராஜபாளையம்

**ஆய்வுச்சுருக்கம்**

*பழங்காலத் தமிழ் இலக்கியத்தின் உள்ளுணர்வைக் கொண்டு எழுதப்பட்டது என்பதுஅனைவரும் அறிந்த உண்மை. இயற்கை, உளவியல், போர் மற்றும் ஆன்மீகம் ஆகியவை வகைகளில் மீண்டும் அறியப்படலாம். ஆனால், இலக்கியத்தில் உயிரற்ற பொருட்களின் பயன்பாட்டின் ஒருமை பாராட்டத்தக்கது. இந்த ஆய்வின் நோக்கம் மனித உயிர்வாழ்வதற்கான அடிப்படையை தீர்மானிப்பதாகும். நோக்கம் என்னவென்றால் இந்த ஆய்வு மக்களின் வாழ்வாதாரத்தின் அடிப்படையை ஆராய்வதாகும். சங்க இலக்கியம் வாழ்வின் உள்ளார்ந்த தேடல்களை ஒருங்கிணைக்கவல்லது. மக்கள் தான் இயற்கையானது, மக்களை மாற்றியமைக் கக்கூடியதாக மாற்றிய தன் மீதும் ஆய்வு கவனம் செலுத்துகிறது. தகவமைப்பு சூழலில் பரந்த அளவிலான நெறிமுறைகளுக்கு ஏற்ப மக்கள். அதில் மேலும் உள்ளது முகபாவனைகளைப் பற்றி அறிய ஒரு வாய்ப்பு. இந்த ஆய்வு உண்மையிலும் கவனம் செலுத்துகிறது. அது மாறிவிட்டதுஎன்று. முன்னோர்களின் ஒழுக்கம் பற்றி அறியவும் இது ஒரு வாய்ப்பாகும். சந்தனமரத்தின் இயற்கை கலாச்சாரத்தை பழங்காலத் தமிழின் ஒப்பீடு.*

***முக்கியச் சொற்கள்:*** *சந்தனம், சந்தம், சாந்து, சத்து, ஆரம், வளமை, ஊடு பயிர், நறைப்பவர்*

## முன்னுரை

தமிழ் இலக்கியங்களில் மிகப்பெரும் மாற்றத்தைஏற்படுத்தும்வகையில்பண்பாடு சார்ந்த மானுடவியல் சார்ந்த ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. தமிழ் மண்ணின் தரத்தையும் தகுதியையும் பன்னாட்டு அளவில் நிறுவுவதற்கு எத்தனையோ சான்றுகள் இருந்தாலும், இயற்கையும் வாழ்வியலும் இரண்டறக் கலந்த இயற்கைச் சூழலைப் பறைசாற்றும் சங்க இலக்கியப் படைப்புகள் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கின்றன. அவற்றுள் கருப்பொருளாக விளங்கும் மரங்கள் பற்றிய ஆய்வு முக்கியமானது மரங்கள் எந்தெந்த வகைகளில் மனித சமுதாயத்திற்குப் பயன்பாடு உடையனவாகத் திகழ்கின்றன என்பதைச் சந்தனமரம் குறித்த ஆய்வின் மூலமாக இக்கட்டுரை மையப்படுத்தியுள்ளது.

## சந்தனமரம்

இயற்கை வாழ்விகள் என்று சொல்லக்கூடிய மரங்கள், உயிரிகளின் உயிர் ஆதாரமாக விளங்குகின்றன. ஐம்பூதங்களின் தன்மைகளை உட்கிரகித்துக் கொண்டு பலவிதமாக வெளிப்படுத்தும் தன்மை மரங்களுக்கு உண்டு. இவை மனிதனுக்கும் பல்லுயிர்களுக்கும் பாதுகாப்பினையும் வாழ்வாதாரத்தையும் வழங்குகின்றன. உலகம் பாலைவனமாகத் தான் தோன்றியிருக்க வேண்டும். அதன் பின்னர் தான் மரங்கள் தோன்றி காடுகள் உருவாகியிருக்கக்கூடும். கல்லும் மண்ணும் தோன்றாத காலத்தில் மலைகள் மட்டும் இருந்திருக்கும் என்பது பொதுக்கருத்து.

பலவகைப்பட்ட மண்வகைகள் உலகம் முழுவதும் காணப்படுகின்றன. மண்ணின்

தன்மைக்கு ஏற்ப மரவகைகளின் தோற்றமும் அமைந்து நிலங்களுக்கு சிறப்பையும், வளமையையும் தந்திருக்கின்றன. மரங்கள் இந்த நிலத்திற்கு உரியன என்பதை தமிழர் பண்பாடே ஐந்திணை என்று பிரிக்கும்போது மரங்களையும் திணை சார்ந்து பிரித்து அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்கின்ற உத்தி முறைமைகளையும் செவ்வனே கையாண்டு இலக்கியத்தோடு இயைந்து பயன்படுத்தும் போக்கினை உலகிற்கு உணர்த்தியுள்ளது. இதில் அறிய வேண்டிய கருத்து யாதெனில், நிலம் சார்ந்த பகுப்பாய்வின் கீழ் மரங்களின் தன்மைகளையும், அதன் பயன்பாடு களையும் சங்க கால மக்கள் எவ்விதம் உணர்ந்திருந்தனர் என்பதை அறிவதாகும்.

### திணைக்கோட்பாடு

### திணை – விளக்கம்

திணை என்ற சொல்லிற்கான விளக்கமாக இடம், ஒழுக்கம், குடி, குளம், பூமி, பொருள் என்று தமிழ் மொழி அகராதி2 பொருள் தருகின்றது.

அபிதான சிந்தாமணியில், 1, உயிர்திணை, அஃறிணை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் இவை முறையே மலை, மலைக்காடு, காடு, ஊர், கடல் சார்ந்த நிலங்கள் 2. அகத்திணை, புறத்திணை என்று விளக்கம் தருகிறது.

திணையின் கொள்கைகளைத் திணைக் கோட்பாடு என்ற பொருண்மையில் சுட்டி ஆராய வேண்டிய அவசியம் ஆய்வுக்குப் பொருத்தமுடையதாக இருக்கும். தொல்காப்பியத்தில் ஐந்திணைக் கோட்பாட்டைச் சொல்லும் சூத்திரம் இடம்பெற்றுள்ளது. இதனை அடுத்து கருப்பொருளை விளக்கும், சூத்திரத்தை தொல்காப்பியம் சுட்டிச் செல்கின்றது. அது யாதெனில்

**“தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப”[4]**

என்று கருப்பொருட்களின் வகைமைகளைத் தொல்காப்பியர் கூறுகின்றார். திணை என்ற சொல்லிற்கு இருவகைப்பட்ட விளக்கங்களை அகராதிகள் வழியாக அறிந்தாலும் அதற்குட்பட்ட கருப்பொருட்கள் இருவகைப்பட்ட அகராதிப் பொருளுக்கும் பொருந்தும் தன்மை உடையனவாக விளங்குகின்றன.

உயரமாக வளர்வது குடகுமலையிலும், பொதிகை மலையிலும் அதிகமாக வளர்கின்றது. ஆரம் என்றழைக்கப்படும் சந்தனமரத்தின் மலர்களில் நறுமணம் இருக்கும். இது இயற்கையின் விந்தையான நிகழ்வுகளில் ஒன்று. இம்மரத்தின் அருகே வேறு வகை மரங்களை நட்டு வளரச்செய்தால் அடுத்த மரத்தின் சத்துக்களை உறிஞ்சி வாழும். எனவே, சந்தன மரத்தின் அருகே மற்றொரு சந்தனமரத்தை மட்டுமே நட்டு வளர்ப்பர் என்பர் தாவரவியலாளர்கள்.

### பயன்படு பொருட்கள்

“ஆரம்” எனப்படும் சந்தன மரத்தைப் பயன்படுத்தி சிலைகள், உலக்கை போன்ற பொருட்கள் செய்யப்பட்டுள்ளன.

இம்மரத்தின் எண்ணெயை “அகல்” என்ற சொல்லினால் அழைப்பார்கள். இம்மரத்தின் தாயகம் இந்தியா என்றும் பரவலாக இலங்கை, பர்மா, தென்ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் அதிக அளவில் காணப்படுகின்றது. இந்தியாவில் கர்நாடகாவில் தான் 65% மரங்கள் அதிக அளவில் உள்ளன.

### அக இலக்கியங்களில் சந்தனமரம்

1. நிலம் மற்றும் திணை அடிப்படையை பயன்பாடுத் தன்மை
2. பெருமிதத் தன்மை
3. உளவியல் தன்மை
4. கருப்பொருள் நோக்கு
5. இயற்கை சார்ந்த நோக்கு

### புற இலக்கியங்களில் சந்தனமரம்

### 1. வளமை அடிப்படை

பண்டைத் தமிழ் சமூகம் வாழ்வியலை புரிதலுக்கும், உணர்வுக்கும் உட்படுத்திக் கொண்டு நேரிய தன்மை உடைய மனங்களைப் பெற்றவர்களாக விளங்கியமைக்கு இயற்கையும் காரணமாகச் சுட்டலாம். எதனையும் பொருப்பும், பொறுமையும் அறிந்து அதன்வழி செயல்பட்டமைக்கு காரணம் அவர் வாழ்ந்த குன்று சூழ் நிலங்களும், மரங்கள் சூழ் வனங்களுமாகும். அவ்வகையில், மரங்கள் சூழ்ந்த காடுகள் யாவும் பலவகையான இயற்கைக் கொடைகளை மக்களுக்கு வழங்கியுள்ளன. அவற்றை எவ்வகையில் பயனுடையதாக மாற்றிக் கொள்ள முனைய வேண்டும் என்பதை ஆராய்ந்து தெளிந்து வாழ்வியலுக்கும், நடைமுறைக்கும் மருத்துவத்திற்கும் எனப் பயன்பாடுடையதாக மாற்றிக்கொண்ட போக்கை அறிய முடிகின்றது.

### சந்தன மரத்தின் வளர்ச்சி

சந்தன மரம் பற்றிய பொதுவான கருத்து என்னவென்றால், இம்மரத்தை நடும்போது ஊடே சவுக்கு மரத்தை நடுவார்கள். ஏனென்றால் தனக்குத் தேவையான சத்தினைத் சவுக்கு மரத்தின் வேர் மூலம் பெற்று அது வளரும் தன்மை உடையது "சந்தனமரம்" பழந்தமிழ் சமூகம் இதை அறிந்து ஊடுபயிர் விளைவித்துச் சந்தனமரம் செழிப்பாக வளரச் செய்திருக்கின்றார்கள்.

### அக இலக்கியங்களில் நிலம் அடிப்படையில் பயன்பாட்டுத் தன்மை

குறிஞ்சி நிலத்தின் கருப்பொருளாக விளங்கும் சந்தனமரம் அந்த நிலத்தில் இருக்கும் தேனீக்கள் தேனைச் சேகரித்து வைப்பதற்குச் சந்தனமரத்தை அதிகம் பயன்படுத்தும் என்கிறது நற்றிணைப் பாடல்.

**"தாமரைத் தான்தாது ஊதி, மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீம் தேன் போல,
புரைய மன்றோர் புரையோர் கேண்மை"[6]**

என்ற பாடலில் தலைவி, தலைவனோடு கொண்ட நட்பு உயர்ந்தது என்பதைக் கூறி, தேனீயைச் சுட்டி அது உயர்ந்த சந்தனமரத்தில் தனது மகரந்தங்களை ஊதும் தன்மை கொண்டது என்று புலவர் கபிலர் பாடல் கூறுகின்றது. சந்தனமரத்தின் உயர்ச்சியைச் சுட்டி அதோடு தலைவனும் உயர்ந்த பண்புடையவன் என்று கூறும் பொருளை மையப்படுத்திப் பார்க்க வேண்டும்

மற்றொரு நற்றிணைப் பாடலில், பெருங்குன்றூர் கிழார்,

**"குறவர் கொன்ற குறைக்கொடி நறைப்பவர்
நறுங்காழ் ஆரம் சுற்றுவன அசைப்ப"[7]**

நறைக்கொடிகளைக் குறவர்கள் வெட்டினாலும், அவை சந்தனமரத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு வளர்கின்றன என்ற பொருளினைத் தரும் மேற்கண்ட பாடல் வரிகளில் "நறுமணம் கமழும் ஆரம்" என்பதை புலவர் சுட்டிக் காட்டுகின்றார்.

எந்த வகையான மரமானாலும் அதன், மேற்பட்டையை உரிக்கக்கூடாது என்று ஆய்வியல் வல்லுநர்கள், தெரிவிக்கின்றனர். அதே கருத்தை நற்றிணையில் உலோச்சனார் பாடலும் சுட்டிக் காட்டுகின்றது.

**"மரல்நார் உடுக்கை மலை உறை குறவர்
அறியாது அறுத்த சிறியிலைச் சாந்தம்
வறனுற்று ஆர முருக்கி, பையென
மரம் வறிதாகச் சோர்ந்து உக்காங்கு என
அறிவும் உள்ளமும் அவர் வயின் சென்றென"[8]**

மரல் நாரினாலே பின்னிய ஆடையை உடைய மலைவாழ் குறவர்கள் சிறிய இலையை உடைய சந்தன மரத்தின் மேற்பட்டையை அறியாமையால் அறுத்தனர். அதனால்

அந்த மரம் வற்றத் தொடங்கி வறிதாகிச் சோர்ந்தது என்ற தாவர அறிவியல் அறிந்தவர்களாகப் புலவர் பெருமக்கள் விளங்கியிருந்தனர் என்ற உண்மையை உணரமுடிகின்றது. மரங்களின் ஆதாரமாக விளங்கும் தோல் போன்ற தன்மை கொண்டவைதான் பட்டைகள். அவை நீரினைத் தக்கவைத்து மரங்களை வற்ற விடாது பச்சையாகவே வைத்திருக்கும் என்பதை அறிய முடிகின்றது.

மரங்கள் தழைப்பது பற்றிய கருத்தை நற்றிணையில் பூதங்கண்ணனார் பாடல் எடுத்துரைக்கின்றது.

**"நீரை முகந்து கொள்ளும் கரிய மேகம்"**

மேற்குப்புற மலையில் மழையைப் பெய்தலால், சிறிய கிளைகளில் பூங்கொத்துக்களை உடைய குளிர்ச்சி பொருந்திய சந்தன மரம் தழைத்தது என்பதை

> ***"கொண்டல் மாமழை குடக்கு ஏர்பு குழைத்த***
> ***சிறுகோல், இணர பெருண்தண் சாந்தம்***
> ***வகைசேர் ஐம்பல் தகைப் பெற வாரி"*** [9]

மழைப் பொழிவினால் சந்தனமரம் தனது சிறிய கிளைகளிலேயே பூக்களைப் பூத்தது என்னும் போது, சிறிய கிளைகளிலேயே நல்ல நலன்களை வழங்கும் தன்மை உடையது என்பதால் தான் விறலி சந்தனமரத்தின் கீழ் நின்று மகிழ்வோடு நடனமாடுகின்றாள். குளிர்ச்சி பொருந்திய தன்மையோடு உளவியல் சார்ந்த போக்கில் மகிழ்வை நறுமணத்தால் ஏற்படுத்தி, எத்தனை கவலைகள் இருப்பினும் அத்தனையையும் மறக்கச் செய்யும் பணியைச் செவ்வனே செய்ய உதவும் தன்மை உடையது. விறலி சந்தன மரத்தின் நிழலில் சென்று நடனமாடினாள் என்பதோடு பூக்கள் தரும் வளமை உடைய சந்தன மரங்கள் என்ற மரத்தின் தன்மையையும் சேர்த்து புலவர் பாடியுள்ளார்.

சாந்தம் என்ற சொல்லின் பொருள் சந்தனத்தைக் குறிக்கும். மண் வளம் பொருந்திய நிலத்தில், நல்ல மழைவளம் இருந்தால் அந்த நிலம் செழிப்படையும் என்ற நிலம் சார்ந்த இயற்கை சார்ந்த சூழலமைவுகளை சந்தனமரம் பற்றிய நற்றிணைப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

### பெருமிதம் அடிப்படையில் சந்தனமரம்

ஒரு மரம் எந்தெந்த அடிப்படையில் பெருமை பொருந்தியதாகப் பார்க்க முடியும் எனில், அந்த மரத்தின் ஆயுட்காலம், உறுதி, பயன்தரும் தன்மை, நுகர்ச்சி (அ) பயன்படு பொருட்களின் வகைமைகள், மருத்துவத் தன்மைகள் என்று கூறிக்கொண்டே போகலாம். அந்தவகையில் பெருமையும் உரனும் கலந்த தன்மை உடைய சந்தமரமானது தேன் இறால்கள் சென்று தேனீக்களை சேர்க்கும் உயர்ந்த தன்மை உடையது என்னும் பொருண்மையில்,

> ***"நறைகால் யாத்த நளிர் முகைச் சிலம்பில்***
> ***பெருமலை விடரகம் நீடிய சிறியிலைச்***
> ***சாந்த மென் சினை தீண்டி மேலது***
> ***பிரசம் தூங்கும் சேண் சிமை"*** [10]

என்ற பாடலில் பேரி சாத்தனார் என்னும் புலவர், தேன் கூடுகள் நெருங்கித் தொகுக்கப் பெற்ற குளிர்ச்சி பொருந்திய குகைகளை உடைய பக்க மலைகளோடு கூடிய பெரிய மலையின் பிளப்புகளின் இடையே நீண்டு வளர்ந்த சிறிய இலைகளைத் தீண்டுமாறு மேலே தேன் இறால்கள் கூட பெருமை பொருந்திய மரத்தின் தன்மையை அறிந்து அதில் தேன் சேகரிக்கும் தன்மையை அறிந்து தன்மையை அறிந்தனவாக தேனீக்கள் இருக்கின்றன என்பதையும் பாடல் சுட்டுகின்றது.

அகநானூற்றுப் பாடலில், தலைவன் நிலத்தில் பெருமைகளைப் பறைசாற்றும் தன்மை உடையவன். எனவே தன் நிலத்தில் காணப்படும் குளிர்ச்சி பொருந்திய சந்தனத்தை மார்பிலே பூசியுள்ளான்.

என்பதாகப் புலவர் தலைவி கூற்றின் வழி புலப்படுத்துகின்றார்.

**"செண்மதி சிறக்க நின் உள்ளம் - நின்மலை**
**ஆரம் நீவிய, அம்பகட்டு மார்பினை"[11]**

என்பதாகப் பாடப்பட்ட வரிகளில், ஆரம் என்ற சொல் சந்தனத்தைக் குறிக்கின்றது.

மற்றுமொரு அகநானூற்றுப் பாடலில், சந்தனம் பூசப்பெற்ற மார்பினை உடைய தலைவனை எண்ணுவதாக தலைவியே தோழியிடம் கூறுவதாக "ஊட்டியார்" என்னும் புலவர் பாடியுள்ள வரிகளில்,

**"சாந்து ஆர் அகலமும் தகையும் மிக நயந்து**
**ஈங்கு நாம் உழக்கும் எவ்வம் உணராள்"[12]**

என்பதில் சந்தனம் பூசப்பெற்ற மார்பை உடைய தலைவனை எண்ணுவது அறியாமல் தாயானவள் வெறியாட்டு நிகழ்த்துவதாகப் பாடியுள்ளார்.

## பிறந்த இடத்திற்கு பயன்தராது

வாழ்வின் உன்னதமாகக் கருதப்படும் தலைவன் தலைவி வாழ்க்கையின் மையப் பொருளாக சந்தனமரம் திகழ்கின்றது என்பதை கலித்தொகை வரிகள் மெய்ப்பிக்கின்றன. பெண் பிள்ளைகள் பிறந்த வீட்டைக் காட்டிலும் புகுந்த வீட்டிற்கு தான் பயன்தரக் கூடியவர்கள் என்பது காலம் காலமாக சொல்லப்படும் உண்மை.

**"பலவுறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை**
**மலையுளே பிறப்பினும், மலைக்கு**
**அவைதாம் என் செயும்?**
**நினையுங்கால், நும் மகள் நுமக்கும்**
**ஆங்கு அனையளே"[13]**

பெண் பிறந்த இடத்தைவிட புகுந்த இடத்திற்குப் பெருமை தேடி தரும் தன்மை உடையவள் என்பதை விளக்க எண்ணிய புலவர், மலைப் பக்கத்தில் சந்தனம் பிறந்தாலும், அதனால் மலைக்கு எந்த பயனும் இல்லை. அதை பயன்படுத்துபவருக்கு மட்டுமே பயன்தரக்கூடியது. அந்த வகையில் உளவியல் நோக்கோடு பார்க்கும்போது பலவிதமான எண்ணங்கள் தோன்றுகின்றது. ஒரு மரத்தின் தன்மையை எவ்வாறெல்லாம் பயன்படுத்த முடியும் என்பதைச் சங்கப் புலவர் பெருமக்கள் உணர்ந்திருந்தனர். அதனை அடிப்படை கருதுகோளாகக்கொண்டு பாடல்கள் புனைந்துள்ளனர் என்பதெல்லாம் சங்க விழுமியங்களாக நோக்கத் தக்கன.

## பயன்படுபொருளாக சந்தனமரம்

காலம் காலமாக மரங்களைப் பலவித தேவைகளுக்காக பயன்படுத்தி வரும் போக்கு காணப்படுகின்றது. இப்படிப் பயன்படுத்தப்படும் மரங்கள் தாவரங்கள் பற்றி மிகப்பெரிய அளவில் ஆய்வுப் பணிகள் நடைபெறவில்லை என்றால், ஒரு சில ஆய்வாளர்கள் தாவரங்கள் மரங்கள் பற்றிய மிகத் தெளிவான ஆய்வினை தமிழ் உலகிற்கு கொடையாகத் தந்திருக்கின்றனர். அந்த வகையில் தாவரங்கள், மரங்கள் பயன்படுத்தப்படும் முறைகளை சிவ சுப்ரமணியம் கூறுகையில்,

"புல், புதர்ச் செடிகள், குறுமரம், அடர்தாவரம் என தாவரத் தொகுதிகளைப் பிரித்துப் பார்த்த தன்மையுடன், தாவரங்களில் பூக்கள் பூக்கும் காலம், பொழுதுகளையும் அவற்றின் தன்மைகளையும் நுட்பமாக அறிந்து வைத்திருந்த தமிழர்களின் இயற்கை அறிவு (Natural science) இன்றளவும் பிரம்மிக்கத்தக்கதாக உள்ளது"[14] என்று கூறுகின்றார்.

குறிஞ்சிநில மக்களின் பயன்படு பொருட்களில் ஒன்றான சந்தன மரத்தினை உரலாகச் செய்து பயன்படுத்தியுள்ளனர். மக்கள் வளமையான செல்வ செழிப்புடன் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை அறியமுடிகின்றது.

சங்க காலக் குறுநில மன்னர்களின் கொடைத் தன்மையைச் சொல்ல வேண்டுமென்றால் அளவிடற்கரிய வகையினைச் சுட்டலாம். எனினும் "சந்தனமரம்" என்பதை ஆய்வுப் பொருளாக்கி சுட்டும் போது ஒரு பானை

சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல, சங்க கால குறுநில மன்னன் ஆய் அண்டிரனின் பெருமையையும் சந்தனமரத்தையும் ஒரு சேரப் பார்க்கும் ஆய்வாகப் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளப் பாடல் வரிகள்,

**"விடர் முகை அடுக்கத்துச் சினை முதிர் சாந்தம்**
**புகர்முக வேழத்து மருப்பொடு, மூன்றும்"[15]**

என்ற பாடலில், மலைப்பிளவுகளையும் குகைகளையும் உடைய மலைப்பக்கத்தே கிளை தாழ்ந்து முதிர்ந்து நிற்கும் சந்தனக் கட்டையும், புள்ளிகளை முகத்தேகொண்ட யானைகளின் மருப்பொடும் மூன்றும் ஒளி விளக்குகின்ற புள்ளிகளை உடைய வலிய புலியினுடைய வரி அமைந்த தோளின் மேல் குவித்து விருந்தினருக்குக் திரையாகக் கொடுக்கும் இயல்பை உடையவன் ஆய் அண்டிரன் என்று மன்னனின் புகழ் பாடப்பெற்றுள்ளது.

**வைரம் பாய்ந்த சந்தன மரம்**

சந்தன மரம் பற்றிய ஆய்வுகள் தாவரவியல் துறையில் அதிக அளவில் செய்திருக்கின்றனர். கலை உலகில் தமிழ் மொழியின் பண்பட்ட இலக்கியத் தரவுகளை பழந்தமிழ் இலக்கியங்களில் காணலாம். அதிலும் இயற்கை வளங்கள் எவ்வகையில் பயன்படக் கூடியன என்பதை அதன் அடிப்படைத் தன்மைகளையும் செய்யுட்களில் புலவர்கள் தந்திருக்கின்றனர். அதில் சந்தன மரத்தின் பண்பட்டத் தன்மையாக வைரம் பாய்ந்த கட்டை என்ற சொல்லாடலை நாம் அறிந்திருப்போம். சந்தன மரத்தின் வைரம் பாய்ந்த என்ற சொல்லினை பரிபாடலில் காணமுடிகின்றது.

**"ஊழ் ஆரத்து ஓய் கரை நூக்கி புனல் தந்த**
**காழ் ஆரத்து அம் புகை சுற்றிய தார்மார்பின்**
**கேழ் ஆரம் பொறப்ப வருவானைத் தொழாஅ"[17]**
***(பரிபாடல் 27 - 44)***

என்ற வரிகளில் "காழ் ஆரம்" என்ற சொல்லானது வைரம் பாய்ந்த சந்தன மரம் என்பதைக் குறிப்பிடுகின்றது. மேலும் இயற்கையில் தோன்றும் மின்னலும், இருளையும் கண்டு மரங்கள்கூட அஞ்சும் தன்மை உடையன என அறிவியல் ஆய்வாளர்கள் போன்று புலவர் பெருமக்கள் ஆராய்ந்து தெளிந்துள்ளனர்.

**"வளிபொரு மின்னொடு வான் இருள் பரப்பி**
**விளிவு இன்று, கிளையொடு மேல் மலைமுற்றி**
**தளி பொழி சாரல் ததர் மலர் தாஅய்;**
**ஒளி திகழ் உத்தி உருகெழு நாகம்**
**அகரு. வழை, ஞெமை, ஆரம் இனைய**
**தகரமும், ஞாழலும், தாரமும், தாங்கி"[18]**

அஞ்சும் இயல்பு கொண்ட பாம்பினது பெயரும்கொண்ட அந்த மலைச் சாரலிலுள்ள நாகமரமும், அகில், சுர புன்னை, ஞெமை, சந்தனம் ஆகிய மரங்கள் வருந்துமாறு மேகங்கள் மின்னலையும் இருளையும் மாறிமாறிப் பரப்பின என்று இயற்கை கண்டு மரங்களும் அஞ்சும் என்பதை எடுத்துரைக்கின்றது.

"வைரம் பாய்ந்த மரம்" என்பதை,

**"நுண் பூண் அகம் திளைப்ப திண்காழ்**
**நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை[19]**

என்பதில் "திண் காழ்" என்ற சொல்லானது வைரம் பாய்ந்த சந்தனம் என்பதை குறிப்பிடுகின்றது.

"குடகு நாடு" அந்த குடகு நாட்டில் இருந்து நீர்வளம் குறைந்த காலத்தினும் நீர்த்துறைத் தோறும் சந்தன மரங்களைச் சுமந்து வரும் தன்மை உடையன என்பதை

**"நறையும் நரந்தமும் அகிலும் ஆரமும்**
**துறைதுறை தோறும், பொறை உயிர்த்து ஒழுகி**
**நுரைத்தலைக் குரைப்புனல் வரைப்பு அகம் ...."[20]**

சங்க இலக்கியத்தில் மரங்கள் பற்றிய ஆய்வுகள் போல பலவிதமான கூறுகளைக் கொண்டதாகப் புதுவகையான தரவுகளும் மேம்பாடு உடைய விளக்கங்களுக்கு உட்பட்டவைகள் விளங்கி வருவதை உணர்த்துகின்றன.

## குறிப்புகள்

1. 1948. *புறப்பொருள் வெண்பா மாலை,* ப-781,திருநெல்வேலி,ஐயனாரிதனார், கழக வெளியீடு, முதற்பதிப்பு.
2. 2003. *தமிழ்மொழி அகராதி.* சென்னை நா.கதிரை வேற்பிள்ளை சாரதா பதிப்பகம், செம்பதிப்பு. முதற்பதிப்பு.
3. 2004. *அபிதான சிந்தமணி,* ப - 991, சென்னை, சாரதா பதிப்பகம், செம்பதிப்பு.
4. 1994. *தொல்காப்பியம் பொருளதிகாரம்,* மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், முதற்பதிப்பு.
5. சுப்ர பாரதி. 2017. மறைந்து வரும் மரங்கள். சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. 2003. *நற்றிணை பாடல் எண் - 1.* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
7. 2003. *நற்றிணை பாடல் எண் - 51.* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
8. 2003. *நற்றிணை பாடல் எண் - 64.* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
9. 2003. *நற்றிணை பாடல் எண் - 140.* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
10. 2003, *அகம் பாடல் எண் - 242.* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
11. 2003, *அகம் பாடல் எண்- 288.* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
12. 2003. *அகம் 3 88.* சென்னை. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
13. 2003. *கலி - 9 நியூ.* சென்னை, செஞ்சுரி புக் ஹவுஸ்.
14. ஆ.சிவசுப்ரமணியன். 2019. *தமிழரின் தாவரவழக்காறு,* உயிர் பதிப்பகம்.
15. 2003. புறம் - 374, சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
16. எஸ் நாராயணன். 2009. *வாழ்வு தரும் மரங்கள் ப- 84ஆர்,* சென்னை, பாவை பிரிண்டர்ஸ்.
17. 2003, *பரிபாடல் 27 - 44.* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
18. 2003, *வையை பரி : 12.* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
19. 2003, திருமுருகாற்றுபபடை 32 - 36. சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
20. 2003. *பொருந - 235 - 240,* சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.